RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 163 | ஜூன்.18, 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ''விளைநிலங்கள் வழியாக எண்ணெய் குழாய்கள் பதிக்கக்கூடாது''

### டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை: ஜூன்.18-

கோவை, திருப்பூரில் விளைநிலங்களின் வழியாக எண்ணெய் குழாய் பதிக்கும் பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் திட்டத்திற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எனவே, விளைநிலங்கள் பாதிக்காத வகையில் மாற்று ஏற்பாடுகளை செய்ய மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் வலியுறுத்தியுள்ளார்

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் சார்பாக கோவை இருகூர் முதல் கர்நாடக மாநிலத்தின் தேவனஹந்தி வரை நடைபெறும் IDPL (Irugur-Devangonthi Pipeline) எண்ணெய் குழாய் பதிக்கும் திட்டத்தால் விளைநிலங்கள் பாதிக்கப்படுவதாக கூறி கோவை, திருப்பூர், நாமக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே, கொச்சி ரூ கோவை ரூ கரூர் வழித்தடத்தில் பதிக்கப்பட்ட பைப் லைன் திட்டத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு இதுவரை வழங்கப்படாத நிலையில், மேலும் ஒரு ராட்சத குழாயை விளைநிலங்களில் பதிக்க பணிகள் நடைபெற்று வருவது அப்பகுதி விவசாயிகள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெட்ரோலிய நிறுவனத்தின் ராட்சத குழாய்களை விளைநிலங்கள் வழியாக அமைக்கப்படாமல் சாலைகளின் ஓரமாக அமைக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை மத்திய மாநில அரசுகள் நிராகரித்திருப்பதோடு, விவசாயிகளின் அனுமதியின்றி கோவை மாவட்டம் இருகூரில் இருந்து திருப்பூர் மாவட்டம் முத்தூர் வரை சுமார் 70 கி.மீட்டர் தூரத்திற்கு குழாய் பதிக்கும் பணியை தொடங்கியிருப்பது எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

எனவே, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி அவர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து, அத்திட்டத்தை விளைநிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயல்படுத்துவதோடு, ஏற்கனவே விளைநிலங்களில் பதிக்கப்பட்டுள்ள எண்ணெய் குழாய்களுக்கான உரிய இழப்பீட்டை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## காங்கிரஸூக்கு குடுக்காதீங்கோ..! கோவை தெற்கு தொகுதிக்காக கொடிபிடிக்கும் திமுக!

கோவை, ஜூன்.18-

கோவை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளையும் தற்போது அதிமுக கூட்டணி தன்வசத்தில் வைத்திருக்கிறது. இந்த பத்திலும் இம்முறை திமுக கூட்டணியை ஜெயிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவே முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கோவையில் உட்கார வைத்திருக்கிறது திமுக தலைமை. பாஜக எம்எல்ஏவான வானதி சீனிவாசனின் கோவை தெற்கு தொகுதியையும், முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் தொண்டாமுத்தூர் தொகுதியையும் இம்முறை கட்டாயம் கைப்பற்றியே ஆகவேண்டும் என்பதும் செந்தில் பாலாஜிக்கு தரப்பட்டுள்ள முக்கியமான அசைன்மென்ட் என்கிறார்கள்.

தொண்டாமுத்தூர் தொகுதியில் எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான இழுப்பு வேலைகளை செந்தில் பாலாஜி ஏற்கெனவே தொடங்கிவிட்ட நிலையில், கோவை தெற்கில் இம்முறை திமுகவே போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள் உடன்பிறப்புகள். கடைசியாக 2011ல் கோவை தெற்கில் திமுக போட்டியிட்டது. அப்போது இங்கு களம்கண்ட முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி, அதிமுகவின் சேலஞ்சர் துரைசாமியிடம் தோற்றுப் போனார். இதனால், 2016, 2021 தேர்தல்களில் இந்தத் தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டது திமுக. இந்த இரண்டு தேர்தல்களிலுமே காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செயலாளரான மயூரா எஸ்.ஜெயக்குமார் இங்கு போட்டியிட்டார். இரண்டு முறையும் அவரால் கரை சேரமுடியவில்லை.

கடந்த தேர்தலில் வானதி சீனிவாசனிடம் தோற்றுப் போன மயூரா, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் இரண்டாமிடத்தை தொட்டதால் மூன்றாமிடத்துக்கு தள்ளப்பட்டார். இந்த நிலையில், மீண்டும் கோவை தெற்கில் உதயசூரியன் போட்டியிட வேண்டும் என திமுகவினர் தலைமைக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொதுக்குழு உறுப்பினர் மு.ம.ச.முருகன் உள்ளிட்டோர் கோவை தெற்கை குறிவைத்து ஆயத்தப் பணிகளை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய கோவை மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகள் சிலர், "2021ல் மாநிலம் முழுவதும் திமுக ஆதரவு அலை வீசியது. அப்போது கோவை தெற்கிலும் திமுகவே போட்டியிட விரும்பியது. ஆனால், காங்கிரஸ் தலைமை குறிப்பிட்டுக் கேட்டதால் தொகுதியை காங்கிரஸூக்கு விட்டுத்தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், தொகுதியை கேட்டு வாங்கியவர்கள் வேட்பாளரை ஜெயிக்கவைக்க மெனக்கிடவில்லை. அதனால், மயூரா ஜெயக்குமார் மூன்றாமிடத்துக்குப் போனார். ஒருவேளை, இங்கு திமுக போட்டியிட்டிருந்தால் வானதி சீனிவாசன் வந்தே இருக்கமாட்டார்.

காங்கிரஸின் பிசுபிசுத்துப் போன பிரச்சார அணுகுமுறை, சொந்தக் கட்சிக்குள்ளேயே நடந்த உள்ளடி வேலைகள், மயூராவை பிடிக்காத திமுகவினர் திசைமாறி கமல் ஹாசனுக்கு வாக்களித்தது போன்ற காரணங்களால் மயூரா மூன்றாமிடத்துக்கு போனார். இந்த நிலையில், இம்முறையும் தொகுதியை காங்கிரஸூக்கு கொடுத்தால் மீண்டும் மயூரா தான் வேட்பாளராக வருவார். அப்படி நடந்தால் பழைய வரலாறே திரும்பக் கூடும். அப்படி ஏதும் நடந்துவிடக் கூடாது என்பதால் தான் தொகுதியை திமுகவுக்கு ஒதுக்கச் சொல்லி தலைமையை இப்போதே வலியுறுத்த ஆரம்பித்திருக்கிறோம்" என்றார்கள்.

இதுகுறித்து மயூரா எஸ்.ஜெயக்குமாரிடம் கேட்டதற்கு, "காங்கிரஸூக்கான தொகுதிகள் எண்ணிக்கை முடிவான பிறகு தான் எந்தெந்த தொகுதிகள் என முடிவாகும். அதன் பிறகு வேட்பாளர்கள் முடிவு செய்யப்படுவர். தேர்தல் அறிவிப்பு வந்தவுடன், கூட்டணியில் தொகுதிகள் ஒதுக்கீடு தொடர்பாக கமிட்டி போடப்படும். எங்களுக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளை நாங்கள் கேட்போம். அதை ஒதுக்குவது குறித்து திமுக முடிவு செய்யும். தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் உள்ளது. எனவே, இந்தத் தொகுதியை எதிர்பார்க்கிறோம் என்று இப்போதே நாங்கள் கூற முடியாது. கோவை தெற்கு உள்ளிட்ட கோவையில் எந்தத் தொகுதியையும் திமுகவினர் எதிர்பார்ப்பது அவர்களின் உரிமை. அதை நான் குறை சொல்ல முடியாது" என்றார்.

## கீழடி விவகாரத்தில் மத்திய அரசுக்கு எதிரான திமுக ஆர்ப்பாட்டம் ஸ்டாலின் அழைப்பு



சென்னை: ஜூன்.18-

"கீழடி விவகாரத்தில் இன்று (ஜூன் 18) மதுரை வீரகனூரில் திமுக மாணவரணி நடத்தவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கூடி மத்திய அரசுக்கு நமது தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்துவோம்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில், "எத்தனை எத்தனை தடைகள் நம் தமிழினத்துக்கு? அத்தனையையும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எதிர்த்துப் போராடி, அறிவியல் துணைக்கொண்டு நம் இனத்தின் தொன்மையை நிறுவி வருகிறோம். இருந்தும் ஏற்க மறுக்கின்றன சில மனங்கள். திருத்த வேண்டியது அறிக்கைகளை அல்ல; சில உள்ளங்களை.

இன்று மதுரை வீரகனூரில் திமுக மாணவரணி நடத்தவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கூடி மத்திய அரசுக்கு நமது தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்துவோம், அவர்களைத் திருத்துவோம்," என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

முன்னதாக, 'அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் பாஜகவை கண்டித்து மதுரையில் வருகிற 18ம் தேதி திமுக மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்' என அறிவிக்கப்பட்டது.

## 37 ஆயிரம் காவலர்களுக்கு பயனளிக்காத பதவி உயர்வு திட்டம்: அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை: ஜூன்.18-

காவல்துறையில் பணியாற்றும் காவலர்களின் பதவி உயர்வுக்கான காலவரம்பை குறைத்து தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணையால், 37 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'காவல்துறையில் பணியாற்றும் காவலர்களின் பதவி உயர்வுக்கான காலவரம்பை குறைத்து தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணையால், 37 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. அனைத்துக் காவலர்களும் பயனடையும் வகையில், பதவி உயர்வு வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த திமுக, இப்போது அதற்கு எதிராக செயல்படுவது கண்டிக்கத்தக்கது.

தமிழக காவல்துறையின் இரண்டாம் நிலைக்காவலர்களாக பணியில் சேருபவர்களுக்கு பத்தாண்டுகளில் முதல் நிலைக் காவலராகவும், அடுத்த ஐந்தாண்டுகளில் தலைமைக் காவலராகவும், அடுத்த பத்தாண்டுகளில் சிறப்பு சார் ஆய்வாளராகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. காவலர்களாக பணியில் சேர்பவர்கள் சார் ஆய்வாளர்களாகக் கூட பதவி உயர்வு பெற முடியாத சூழல் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில் தான், இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 10 ஆண்டுகளில் முதல்நிலைக் காவலர், 13 ஆண்டுகளில் தலைமைக் காவலர், 23 ஆண்டுகளில் சிறப்பு சார் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கப்படும் என்று கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

அதன்படி வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், பதவி உயர்வுக்காக கால வரம்பு குறைப்பு முதல்நிலைக் காவலர்கள் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு மட்டும் தான் பொருந்தும் என்றும், ஏற்கனவே தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு இது பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது சரி செய்ய முடியாத அநீதி ஆகும். காவலர் பதவி உயர்வுக்கான கால வரம்பு குறைப்பு என்பதன் நோக்கமே அனைத்துக் காவலர்களும் அவர்கள் பணியில் சேர்ந்த 23ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் சிறப்பு சார் ஆய்வாளராகவாவது பதவி உயர்வு பெற வேண்டும் என்பது தான். ஆனால், படிநிலைகளை ஏற்படுத்தி ஒரு தரப்பினருக்கு பதவி உயர்வை மறுப்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

2011ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன் இரண்டாம் நிலைக் காவலராக பணியில் சேர்ந்தவர்கள் இப்போது தலைமைக்காவலர் நிலைக்கு உயர்ந்திருப்பார்கள். அதேநேரத்தில் பத்தாண்டுகள் தலைமைக்காவலர்களாக பணி செய்தவர்கள் மட்டும் தான் சிறப்பு சார் ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெற முடியும் என்பதால் ஏற்கனவே தலைமைக்காவலர்களாக பதவி உயர்வு பெற முடியாது என அரசு கூறுகிறது. இது ஏற்க முடியாத வாதம். இது போன்ற சூழல்கள் ஏற்படும் போது, அதை சிறப்பு நேர்வாகக் கருதி 2011ஆம் ஆண்டுக்கு முன் பணியில் சேர்ந்த அனைவரும் இரு ஆண்டுகளுக்கு முன்பே தலைமைக் காவலராக பதவி உயர்வு பெற்றதாகக் கருதி, அதனடிப்படையில் சிறப்பு சார் ஆய்வாளர் பதவி உயர்வும் வழங்கப்படுவது தான் சரியானதாக இருக்கும். அப்போது தான் காவலர் பதவி உயர்வுக்கான கால வரம்பு குறைப்பு அனைவருக்கும் பயனளிப்பதாக அமையும். மாறாக, பெரும்பான்மையினருக்கு பயனளிக்காத திட்டங்கள் தேவையற்றவை.

தமிழக அரசு அறிவித்திருக்கும் காவலர் பதவி உயர்வுக்கான கால வரம்பு குறைப்பு திட்டத்தின்படி, சுமார் ஒரு லட்சம் காவலர்களைக் கொண்ட தமிழகக் காவல்துறையில் வெறும் 8533 பேர் மட்டும் தான் பயனடைவார்கள். 2011ஆம் ஆண்டுக்கு முன்பாக 2011ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த 8,000 பேர், 2010ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த 4000 பேர், 2009ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த 8500 பேர், 2008ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த 3500 பேர், 2006ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த 1500 பேர், 2003ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த 8500 பேர், 2002ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த 3500 பேர் என மொத்தம் 37,500 காவலர்களுக்கு இந்தத் திட்டத்தால் எந்தப் பயனும் கிடைக்காது. அப்படியானால் இப்படி ஒரு திட்டத்தை ஏன் செயல்படுத்த வேண்டும் என்ற வினா எழுவதை தவிர்க்கவே முடியாது.

2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின் போது திமுக ஆட்சிக்கு வந்தால், இரண்டாம் நிலைக் காவலர்களாக பணியில் சேர்பவர்களுக்கு அடுத்த 7 ஆண்டுகளில் முதல் நிலைக் காவலர்களாகவும், பத்தாண்டுகளில் தலைமைக் காவலர்களாகவும், 20 ஆண்டுகளில் சிறப்பு சார் ஆய்வாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்படும் (வாக்குறுதி எண்:389) என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் அதை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசு, காவல் ஆணையத்தை அமைத்து அதன் அறிக்கையை பெறுவதற்காக 4 ஆண்டுகள் காலம் கடத்தியது. இப்போது அறிவிக்கப்பட்டுள்ள திட்டம் கூட, திமுகவின் வாக்குறுதியை விட 3 ஆண்டுகள் குறைவான பயன் அளிப்பதாகவே உள்ளது; அதுவும் கூட சுமார் 37,500 பேருக்கு எந்த பயனும் அளிக்காததாக உள்ளது. மொத்தத்தில் இது வெற்றுத் திட்டம்.

தமிழ்நாட்டில் காவலர் பணி என்பது மிகவும் கடினமானது; நன்றியில்லாதது. காவலர்களாக பணியில் சேருபவர்கள் நேரம் காலம் இல்லாமல், விடுமுறை இல்லாமல் உழைக்க வேண்டியிருக்கும். அவ்வாறு உழைத்தாலும் பொதுமக்களில் தொடங்கி, உயர் அதிகாரிகள் வரை அனைவரிடமும் அவப்பெயரைத் தான் வாங்க வேண்டியிருக்கும். அத்துடன் இல்லாமல், காவலர்களாக பணியில் சேரும் அவர்கள் அதிகாரிகளாக பதவி உயர்வு பெற முடியாமல் காவலர்களாகவே தான் ஓய்வு பெற வேண்டியிருக்கும். சிறப்பு சார் ஆய்வாளர் என்பது கூட அதிகாரி பதவி கிடையாது. அதுவும் காவலர் நிலைக்கு ஒப்பானது தான். அந்த பதவி உயர்வை வழங்குவதில் கூட தமிழக அரசு தேவையற்ற பாகுபாடு காட்டக்கூடாது.

எனவே, காவலர் பதவி உயர்வுக்கான கால வரம்பு குறைப்பு திட்டத்தை அனைவருக்கும் பயனளிக்கும்படி மாற்ற வேண்டும். 2002 முதல் 2011 ஆம் ஆண்டு வரை பணியில் சேர்ந்தவர்களுக்கு இத்திட்டத்தின்டியான தலைமைக்காவலர் பதவி உயர்வை இரு ஆண்டுகள் பின்தேதியிட்டு செயல்படுத்த வேண்டும். அதன் மூலம் அக்காலத்தில் பணியில் சேர்ந்த 37,500 பேருக்கு பதவி உயர்வு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்

## அதிமுக குறித்து அண்ணாமலை பேசியது பாஜக கட்சியின் கருத்து அல்ல: தமிழிசை திட்டவட்டம்

சென்னை: ஜூன்.18-

அதிமுக குறித்து அண்ணாமலை விமர்சனம் செய்திருப்பது கட்சியின் கருத்து அல்ல என, பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று மேலும் கூறியதாவது: திமுக கூட்டணி உறுதியாக இருக்கிறது என்கிறார்கள். ஆனால், அந்த கூட்டணி உதிர்ந்து போகிற நிலையில்தான் உள்ளது. கூட்டணி கட்சியாக இருந்தாலும் கூட கொடியேற்றுவதற்கு அனுமதி கிடைப்பதில் சிரமம் இருக்கிறது என திருமாவளவன் கூறுகிறார். ஆனாலும், அவர் அந்த கூட்டணியில்தான் ஒட்டிக் கொண்டிருக்கிறார். திமுக இன்னும் பல வாக்குறுதிகளை நிறை வேற்றவில்லை என கூட்டணி கட்சியினரே சொல்கிறார்கள்.

கூட்டணி கட்சியினர் திமுகவை கேள்வி கேட்க தொடங்கிவிட்டார்கள். மக்களிடம் வாக்கு கேட்டு வந்தால், மக்களே கேள்வி கேட்பார்கள். எனவே, அமித் ஷா கூறியதுபோல, திமுக கூட்டணி மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை உறுதியாக சொல்கிறேன். அதிமுக பாஜக கூட்டணி பலமான கூட்டணி. கூட்டணி குறித்து அமித் ஷா கூறியது தான் கட்சியின் நிலைப்பாடு.

அதிமுக குறித்து அண்ணாமலை விமர்சனம் செய்திருப்பது அவரது சொந்த கருத்துதானே தவிர, கட்சியின் கருத்து கிடையாது. அதிமுக பாஜக கூட்டணி குறித்து அமித் ஷா, நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட அதிகாரப்பூர்வமான தலைவர்கள் சொல்வது தான் கட்சியின் கருத்து.

அண்ணாமலை சொல்வது அவரது தனிப்பட்ட கருத்து. எனவே, தனிப்பட்ட கருத்துக்களுக்கு நான் விமர்சனம் செய்வதில்லை. தேசிய ஜனநாயக கூட்டணியில் இன்னும் யாரெல்லாம் இணைவார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். இவ்வாறு அவர் கூறினார்.



# திண்டுக்கலில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி வாரிய தலைவர் ஆய்வு

திண்டுக்கல், ஜூன்.18-

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி வாரிய தலைவர் தஞ்சை ஜீவா திண்டுக்கல்லில் உள்ள அரசு கேபிள் டிவி கட்டுப்பாட்டு அறையை ஆய்வு செய்யும் போது கூறியதாவது

தமிழகத்தில் முன்னாள் முதல்வர் கலைஞர் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் தொடங்கப்பட்டது.. தற்போது தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்களின் பல ஆண்டுகால கோரிக்கையான வாரியத்தை அமைத்துக் கொடுத்து எட்டு ஆண்டு கால கோரிக்கையான எச்டி உயர் வரையறை செட்டாப் பாக்ஸ் வழங்கப்பட்டு வருவதையும், தடையில்லா சிக்னல் மற்றும் தனியார் நிறுவனத்திற்கு நிகராக உள்ளூர் சேனல்கள் ஆகியவற்றை வழங்கி வருவதையும், அரசு கேபிள் டிவியில் இருந்து பல்வேறு காரணங்களுக்காக வெளியேறி, தனியார் நிறுவனத்திற்கு சென்ற ஆபரேட்டர்கள், தற்போது அரசு கேபிளில் சேவை மற்றும் குறைந்த கட்டணம் ஆகியவற்றால் ஆர்வத்துடன் மீண்டும் அரசு கேபிள் டிவியில் இணைந்து, கேபிள் டிவி சேவையைப் பெற்று பொதுமக்களுக்கு சிறப்பாக வழங்கி வருவதாகவும் மேலும் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு 2 லட்சம் ரூபாய் வரை வங்கி கடன் வழங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஆப்பரேட்டர்களுக்கு உடனடியாக கடனுதவி 25 ஆயிரம் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு புதிய எச்டி செட்டாப் பாக்ஸ் வாங்க ரெண்டு லட்ச ரூபாய் வீதம் 500 கோடி வழங்க ஒப்புதல் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆபரேட்டர்களுக்கு தாமதம் இன்றி வங்கி கடன் மூலம் எச்டி செட்டாப் பாக்ஸ் வழங்கி வருவதற்கு, தமிழக முதலமைச்சர் மு. க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், கேபிள் டிவி வாரிய தலைவர் தஞ்சை ஜீவா மற்றும் கேபிள் டிவி மேலாண்மை இயக்குனராக கூடுதல் பொறுப்பாக செய்தித்துறை இயக்குனர் வைத்தியநாதன் ஆகியோருக்கும் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் நன்றி தெரிவித்தனர்...






# சின்ன கண்ணனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10, 12-ம் வகுப்பு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது

மானாமதுரை, ஜூன். 18-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் சின்ன கண்ணனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நூறு சதவீத தேர்ச்சிக்காக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை முன்னாள் மாணவர்கள் மற்றும் கிராம பொது மக்கள் இணைந்து பாராட்டு மற்றும் முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளையும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளையும் 470 க்கு மேல் மதிப்பெண் பெற்ற 450 க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் ஊக்கத்தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதில் முன்னாள் மாணவர்கள் குழு ஒருங்கிணைப்பாளர் பாண்டி வரவேற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர் பொறுப்பு விஜயராமன் தலைமை ஏற்றும் சிறப்பு விருந்தினராக அன்னம் அமெரிக்காவிலிருந்து வருகை தந்தும் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் தேர்ச்சி பெற்ற முதல் மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அங்குசாமி மானாமதுரை ஓ வெ செ பள்ளியின் தலைமை துணை ஆசிரியர் முத்துராமலிங்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமகிருஷ்ணன் மற்றும் ராமலிங்கம் வேலுச்சாமி கள்ளிக்குடியான் ஆகியோர் கலந்துகொண்டு ஆசிரிய பெருமக்களையும் மாணவர்களையும் கௌரப்படுத்தினார் நிகழ்வின் நிறைவாக பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் கல்யாணசுந்தரம் நன்றியுரை நிகழ்த்தினார்.

# திருப்பூர் மாவட்டம் செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி சதீஷ் பாரபட்சம் பார்ப்பதாக குற்றச்சாட்டு

திருப்பூர், ஜூன்.18-

திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில். செய்திமக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றி வரும் சதீஷ் என்பவர். ஒருதலை பட்சமாக செயல்படுவதாகவும் இவர் இதற்கு முன்பு ஈரோடு மாவட்டத்தில். செய்திமக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது அப்போது இவர் பல பத்திரிகைகளை புறக்கணித்து வந்தார். இவர் மாவட்ட ஆட்சியாளர் செய்திகளை எல்லாம் எல்லா பத்திரிகைகளுக்கும் மின்அஞ்சல் மூலம் அரசு செய்திகளையும் விளம்பரங்களையும். கொடுத்து வருபவர். மிக நெருக்கமான பத்திரிக்கை எனக் கூறிக்கொண்டு. அவர்களுக்கு மட்டும் அரசு விளம்பரம் கொடுத்து அதில் கமிஷன் பெறுவதாகவும் மற்ற தினசரி பத்திரிக்கையாளர்கள். இவர் மீது குற்றம் சாட்டினர். இதனால் கடுப்படைந்த செய்திமக்கள் தொடர்பு அதிகாரி சதீஷ் என்பவர். இவருக்கு எதிரான தினசரி பத்திரிகைகளை தன் அலுவலகத்திலேயே இழிவாக பேசினர். இதை ஈரோடு தினசரி பத்திரிகையாளர்கள் பலர் அவரிடம் விவாதம் செய்தனர். எல்லா பத்திரிகைகளையும் ஒரே மாதிரி கையாள வேண்டும் என்றும். ஒரு சில பத்திரிகைகளை வைத்துக்கொண்டு எங்களை தரக்குறைவாக பேசக்கூடாது என விவாதம் செய்தனர். இந்தப் பிரச்சனை முற்றவே. Pro சதீஷ் என்பவர் நாங்கள் உங்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பும் செய்தியை அப்படியே காப்பி அடித்து செய்தியாக வெளியிடுவது தான் உங்களது வேலை நாங்கள் எழுதி அனுப்பாமல் நீங்களாகவே சுயமாக எழுத முடியாதா. என பல கேள்விகளை செய்தியாளர்கள் முன்பு கடும் கோபத்துடன் பேசினார். இதன் பிரச்சனை தினசரி செய்தியாளர் சங்கத்தின் மூலம் எதிர்ப்பு கிளம்பவே. அங்கு இருந்து பிஆர்ஓ சதீஷை உடனடியாக ஈரோடு மாவட்டத்திலிருந்து திருப்பூர் மாவட்டத்திற்கு மாற்றம் செய்தனர். திருப்பூர் மாவட்டத்திற்கு வந்தவுடன் அமைதியாக இருந்து கொண்டிருந்தர் சில மாதம் கலித்தவுடன் மீண்டும் தன் வேலையை ஒரு சில பத்திரிக்கையாளர்களோடு தொடர்பு கொண்டு. பல பத்திரிகையாளர்களை புறக்கணித்து வருகிறார். மேலும் தினசரி பத்திரிக்கை நண்பர்களும். அரசு விளம்பரங்களை எங்களுக்கு கொடுக்காமல் ஒரு சில பத்திரிகைகளுக்கு மட்டும் கொடுத்துவிட்டு. அதில் கமிஷனாக பெற்றுக்கொண்டு உல்லாசமாக வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். மேலும் பத்திரிகையாளர்கள் அரசு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் செய்திகள் சேகரிக்கவும் அமைக்கப்பட்ட whatsapp என்ற என்னில் அரசு நடத்தும், அனைத்து நிகழ்ச்சிகளையும் முன்கூட்டியே தகவல் தரப்படும். அந்த தகவலை பெற்று. செய்திகள் சேகரிக்க தினசரி பத்திரிக்கையாளர்கள் செல்கின்றனர். இது போன்ற முன்னறிவிப்பு செய்திகளை பல பத்திரிகையாளர்களை புறக்கணித்து. அவர்களை whatsapp எண்ணில் ஏற்றாமலே ஏமாற்றி வருகிறார். காரணம் ஒரு சில பத்திரிக்கையாளர்கள் நாங்கள் தான் முன்னணியில் இருக்கிறோம் என கூறிக்கொண்டு. அரசு நிகழ்ச்சிகளை தினசரி நாளிதழில் செய்தியாக வெளிவர வேண்டும் என திருப்பூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பாளர் சதீஷ் அவர்களைநேரில் சந்தித்து செய்தியாளர்களை பாரபட்சம் பார்க்க வேண்டாம் அனைவரையும் தளத்தில் இணைத்து செயல்படுத்துங்கள் என்று கூறிய பொழுது அவர் யாரையுமே மதிக்காமல் அவமரியாதையாக பேசி வருகிறார் என்றும் கூறப்படுகிறது அது மட்டும் அல்லாது அரசு நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் செய்தி மக்கள் தொடர்பு என மாதம் 200 லிட்டர் டீசல் தமிழக அரசு வழங்கி வருகிறது அவ்வாறு இருக்கும் சூழலில் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் டீசலுக்கு என்று 5000ல் 15 ஆயிரம் வரை பெற்றுக் கொண்டு செல்வதாகவும் அலுவலக வட்டாரங்களில் பேசப்படுகிறது அது மட்டுமல்லாது செய்தியாளர்கள் ஐந்து பேரை மட்டுமே தன் கட்டுக்குள் வைத்துக் கொண்டு அவர்கள் பெயரைச் சொல்லி இருபது முதல் 30 செய்தியாளர்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று அதிலும் பல்லாயிரம் காசுகளைப் பெற்றுக் கொண்டு பெரிய லெவலில் பணமோசடி செய்து வருகிறார் இவர் மீது வருமான வரி துறையோ அல்லது லஞ்ச ஒழிப்புத்துறையோ உரிய விசாரணை செய்தால் இவரின் சொத்து மதிப்புகள் விவரம் அனைத்தும் வெளிவரும் திருப்பூர் மற்றும் ஈரோட்டில் மட்டுமே இவர் கல்லா கட்டியது பல லட்சம் பணமாகும். செய்தியாளர்களை பாரபட்சம் பார்க்கும் இவர் மீது சிறப்பாக ஆட்சி அமைத்துக் கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சியர் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு இயக்குனர் அவர்கள் தனி கவனம் செலுத்தி அரசுக்கும் அரசுநலத்திட்டங்களையும் தமிழகம் என்றும் சென்றடையாமல் அவப்பெயர் ஏற்படுத்தும் இவர்கள்மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று செய்தியாளர்கள் மற்றும் செய்தியாளர் சங்கம் வாயிலாகவும் நம்பிகை வைத்துள்ளனர்.



■ மதுரை திருநகர் முத்துதேவர் முக்குலத்தோர்மேல்நிலைப்பள்ளியில் மாதிரி பாராளுமன்ற தேர்தல் பள்ளியில் நடைபெற உள்ளது. ஆண்டு தோறும் நடைபெறும் இத்தேர்தலில் மாணவச் செல்வங்களின் தலைமை பண்பை வளர்ப்பதற்கும், மாணவப் பருவத்திலிருந்தே அவர்களுக்கு மக்களாட்சி தத்துவத்தின் மகத்துவத்தை உணர்த்தும் விதமாக வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்: மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது

மதுரை, ஜூன்.18-

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் முகாம் மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் திருமதி. சித்ரா விஜயன், இ.ஆப., அவர்கள் ஆகியோர் தலைமையில் இன்று (17.06.2025) நடைபெற்றது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொது மக்கள் குறைதீர்க்கும் முகாமில் சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் வரி திருத்தம் வேண்டி 7 மனுக்களும், பாதாளச் சாக்கடை, குடிநீர் இணைப்பு, சாலை வசதி, தெருவிளக்கு மற்றும் அடிப்படை வசதி வேண்டி 20 மனுக்களும், சுகாதாரம் தொடர்பாக 1 மனுக்களும், ஆக்கிரமிப்பு தொடர்பாக 2 மனுக்களும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 2 மனுக்களும் என மொத்தம் 32 மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து மாண்புமிகு மேயர் அவர்களால் நேரடியாக பெறப்பட்டது. இன்று நடைபெற்ற முகாமில் வீட்டு கதவுஎண் மாற்றம் செய்ய வேண்டி விண்ணப்பித்த மனுதாரருக்கு உடனடியாக வீட்டு கதவு எண் மாற்றம் செய்யப்பட்டு அதற்கான அனுமதி ஆணையினை மனுதாரருக்கு மாண்புமிகு மேயர், ஆணையாளர் ஆகியோர் வழங்கினார்கள்.

இம்முகாமில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், மண்டலத் தலைவர் திருமதி.வாசுகி, துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாபுதீன், நகர்நல அலுவலர் மரு.இந்திரா, உதவி ஆணையாளர் திரு.மணியன், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி வருவாய் அலுவலர் திரு,முகம்மது பாரூக், கண்காணிப்பாளர் திருமதி.மரகதவல்லி, உதவிப் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மூத்த குடிமக்களுக்கு பயனுள்ள வகையில்,

# பயன்பாட்டிலுள்ள மூத்த குடிமக்கள் செயலியினை மூத்த குடிமக்கள் பயன்படுத்திக்கொண்டு பயன்பெற வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, ஜூன்.18-

மூத்த குடிமக்கள் நலன் கருதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள மூத்த குடிமக்கள் செயலியானது (Senior Citizen App) Seniorcitizen.tnsocialwelfare.tn.gov.in (கைப்பேசி செயலி), மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால் செப்டம்பர் 2023ல் வெளியிடப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

இக்கைப்பேசி செயலியில், மூத்த குடிமக்களுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக, அருகாமையில் உள்ள முதியோர் இல்லங்கள், மருத்துவமனைகள், மக்கள் மருந்தகம், ஒன்றிய மாநில திட்டங்கள், மாவட்ட சட்ட சேவைகள் ஆணையம் அதிகாரிகள் விவரம், உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியம் பற்றிய விவரங்கள் மற்றும் அவர்களின் குறைகளை தெரிவித்திடும் வகையில் மூத்த குடிமக்கள் கைப்பேசி செயலி சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, மூத்த குடிமக்கள் கைப்பேசி செயலியை (Senior Citizen App) மூத்த குடிமக்கள் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




# விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், வருகின்ற 20.06.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, ஜூன்.18-

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 20.06.2025 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




# கூடலூர் அருகே காட்டு யானையை விரட்ட 2 கும்கிகள் வரவழைப்பு

நீலகிரி, ஜூன்.18-

கூடலூர் அடுத்த பிதர்காடு பகுதியில் காட்டு யானைகள் முகாமிட்டுள்ளதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். முகாமிட்டுள்ள காட்டு யானைகளை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட 2 கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டன. காட்டு யானைகளை விரட்ட முதுமலையில் இருந்து ஜம்போ மற்றும் கிருஷ்ணா கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டது. நாளை முதல் காட்டு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டும் பணிகள் தொடங்கும் என வனத்துறையினர் தகவல் தெரிவித்தனர்.

# கட்டுமான தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.8 லட்சமாக உயர்த்தி அரசாணை வெளியீடு

சென்னை: கட்டுமான தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.8 லட்சமாக உயர்த்தி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழை எளிய தொழிலாளர்கள் இறந்தால் அவர்களது குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கிட பல்வேறு திட்டங்களை வெவ்வேறு, கால கட்டங்களில் அமலாக்கம் செய்து வந்தது. பின்னர் மேற்குறித்த அரசு ஆணைகளின்படியான எல்லா நிவாரண திட்டங்களையும் ஒருங்கிணைத்து அரசாணை நிலை எண் 471 நிதி (முதலமைச்சர் பொது நிவாரணம் மற்றும் நிதித்துறை விபத்து நிவாரணம் வழங்கிட ஒருங்கிணைந்த ஒரு திட்டமாக "விபத்து நிவாரண திட்டம்"என்ற திட்டத்தினை அரசு அறிவித்தது.



© GOVERNMENT OF TAMIL NADU 2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE
EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 274] CHENNAI, WEDNESDAY, JUNE 11, 2025
Vaikasi 28, Visuvaavasu, Thiruvalluvar Aandu-2056

Part II—Section 1

Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.

NOTIFICATIONS BY GOVERNMENT

LABOUR WELFARE AND SKILL DEVELOPMENT DEPARTMENT

AMENDMENT TO THE TAMIL NADU MANUAL WORKERS (CONSTRUCTION WORKERS) WELFARE SCHEME, 1994.

[G.O. Ms. No. 59, Labour Welfare and Skill Development (I2), 11th June 2025, வைகாசி 28, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]

No. II(1)/LWSD/16(a)/2025.

In exercise of the powers conferred by section 4 of the Tamil Nadu Manual Workers (Regulation of Employment and Conditions of Work) Act, 1982 (Tamil Nadu Act 33 of 1982), the Governor of Tamil Nadu, after consultation with the Advisory Committee hereby makes the following amendments to the Tamil Nadu Manual Workers (Construction Workers) Welfare Scheme, 1994: -

AMENDMENTS.

In the said Scheme, in clause 11, –

(1) for sub-clause (1), excluding the Explanation thereunder, the following sub-clause shall be substituted, namely: -

"(1) All manual workers when met with an accident are eligible for Personal Accident Relief and where the accident results in death at worksite or death occurs on the way to hospital for treatment or death occurs while pursuing treatment in the hospital due to such accident, their nominees are eligible for Personal Accident Relief.";

(2) in sub-clause (2), for item (a), the following item shall be substituted, namely: -

"(a) Death Rs.8,00,000".

K. VEERA RAGHAVA RAO,
Secretary to Government.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

இந்த விபத்து நிவாரண திட்டத்தின்படி ஒரு தொழிலாளி அவர் தன்னுடைய தொழிலில் ஈடுபட்டிருக்கும் போதோ அல்லது அத்தொழில் சார்ந்த இதர பணிகளில் ஈடுபட்டிருக்கும் போதோ விபத்துக்குள்ளாகி இறந்தாலோ அல்லது பாதிக்கப்பட்டாலோ கீழ்க்கண்டவாறு நிவாரண உதவித் தொகை வழங்கிடலாம். அந்த வகையில் சட்டப்பேரவை அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பணியிடத்தில் விபத்து ஏற்பட்டு மரணம் அடையும் கட்டுமான தொழிலாளர்களின் குடும்பத்துக்கு வழங்கப்படும் நிவாரண தொகை உயர்த்தப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.8 லட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக, போக்குவரத்து துறையின் சார்பில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள புதிய விரிவான மினிபஸ் திட்டத்திற்கான தொடக்க விழாவினை தொடர்ந்து, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் வேலுநாச்சியார் விருந்தினர் மாளிகை அருகிலுள்ள மைதானத்தில் நடைபெற்ற விழாவில். மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள். புதிய மினிபஸ் அனுமதி சீட்டிற்கான ஆணையினை பேருந்து உரிமையாளர்களிடம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்.இ.ஆ.ப., அவர்கள், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கே. கருப்பண்ணன், சிவகங்கை நகர் மன்றத்தலைவர் திரு.சி.எம்.துரைஆனந்த். திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.சேங்கைமாறன் மற்றும் மினி பஸ் உரிமையாளர்கள், சங்கத்தினர்கள், ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் உட்பட பலர் உள்ளனர்.



■ மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள், புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தை, திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.இரா.சச்சிதானந்தம், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி செ.ஜோதிமணி, பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ் மற்றும் பலர் உள்ளனர்.



■ தென்காசி தெற்கு மாவட்ட திமுக கள ஆய்வு கூட்டத்திற்கு வருகை புரிந்த தென் மண்டல பொறுப்பாளரும் மாநில மகளிர் அணி செயலாளருமான கவிஞர் கனிமொழி கருணாநிதி முன்னாள் தென்காசி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினருமான டாக்டர் செல்லத்துரை பட்டுப் புடவை கொடுத்து வரவேற்றார் அருகில் தென்காசி மாவட்ட பொறுப்பாளரும் தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் உடன் உள்ளார்..

# தமிழ்நாடு துணை முதலமைச்சர் திருப்புவனம் வட்டத்தில் 40.27 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

திருப்புவனம், ஜூன். 18-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் 40.27 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (17.6.2025)நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.





வைகை ஆறானது தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியமான குடிநீர் மற்றும் பாசன ஆதாரமாக விளங்குகிறது. வைகை ஆற்றின் மூலமாக மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் வைகை ஆற்றிலிருந்து பிரியும் 128 கால்வாய்கள் மூலமாக 374 கண்மாய்களைச் சேர்ந்த 1,36,109 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகில் வைகை ஆற்றின் வலதுபுறம் பிரியும் பழையனூர் கால்வாய் மற்றும் அதே இடத்தில் இடதுபுறம் பிரியும் கானூர் கால்வாய் முதலி யவை மிக முக்கியமான கால்வாய் களாகும். தற்சமயம் வைகை ஆற்றின் படுக்கை மட்டம் மண் அரிமானம் காரணமாக சுமார் 1.20 மீ ஆழம் அளவிற்கு மேல் தாழ்ந்து போய்விட்டதால், வைகை ஆற்றில் செல்லும் நீர் கானூர், பழையனூர் கால்வாய்களில் நீர் ஏறிச்செல்ல இயலாத நிலை உள்ளது. இதனால் மேற் காணும் கண்மாய்களின் பாசன ஆதாரம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் 22.1.2025 அன்று கானூர், பழையனூர் கால்வாய் பாசனம் மூலமாக வேளாண் நிலங்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே 40.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி யினை அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இதன் பயனாக கானூர், பழையனூர் மற்றும் 17 கண்மாய்களின் மொத்த பாசன பரப்பான 6975.53 ஏக்கர் நிலங்களுக்கு வைகை ஆற்று பாசன நீர் ஆதாரம் உறுதி செய்யப்படுவதுடன், இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று கானூரில் தடுப்பணை கட்டும் பணியில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த புகைப்பட ங்களை பார்வையிட்டு, நீர் வளத்துறை அலுவ லர்களிடம் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து தடுப்பணை கட்டும் பணிகளை நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைவாக முடித்து விவசா யிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் நீர் வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் ஆர்.தங்கராஜ், செயற்பொறியாளர் எஸ்.ரமேஷ் உள்பட விவசாய பெருமக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநதிகள் கலந்து கொண்டனர்.




# சர்வதேச யோகா தினம் பிரத்யேக இணையவழி சேவை

சென்னை, ஜூன்.18-

ஜூன் 21ம் தேதி சர்வதேச யோக தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 11வது சர்வதேச யோகா தினம். இந்த ஆண்டுக்கான கருப்பொருள், 'ஒரே பூமி, ஒரே ஆரோக்கியத்திற்கான யோகா'. இந்த ஆண்டு தமிழ்நாடு ஆளுநர் மாளிகை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து, 2025 சர்வதேச யோகா தின நிகழ்விற்காக நிறுவனங்கள், மையங்கள், அமைப்புகள், நிர்வாக துறைகள் உட்பட பல்வேறு துறைகளிலும் பரவலான பங்கேற்பை செயல்படுத்த, ஒரு பிரத்யேக இணையவழி சேவையை தொடங்கியுள்ளது. யோகா பயிற்சிக்கான முனைய மையங்களாக பணியாற்ற விரும்பும் மையங்கள், நிறுவனங்கள், பங்கேற்பாளர் விவரங்களை, இணையவழி வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம்.


தனிப்பட்ட யோகா ஆர்வலர்கள் இணையவழி வா யிலாக பங்கேற்பாளர் முனையம் மூலம் பதிவு செய்து பங்கேற்கலாம். சிறப்பாகச் செயல்படும் முனைய மையங்கள், நிபுணர்கள் அடங்கிய ஒரு தனிப்பட்ட குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெறும் விழாவில் தமிழ்நாடு ஆளுநரால் பாராட்டப்படுவார்கள். விருப்பம் உள்ளவர்கள் https://events.annauniv.edu/ இணையதள பக்கத்தில் சென்று தங்களை இணைத்துக்கொள்ளலாம். கூடுதல் விவரங்களுக்கு 917010257955, 04422357343, 04422351313 எண்களை தொடர்பு கொள்ளலாம்.

# இந்திய நிலப்பரப்பை ஒட்டிய பகுதிகளில் ஒரே நேரத்தில் இரண்டு காற்றழுத்த தாழ்வு பகுதி: வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஜூன்.18-

இந்திய நிலப்பரப்பை ஒட்டிய 2 பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதிகள் உருவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை தொடங்கியது முதல் தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிக தீவிரமாக இருந்து வருகிறது. தென்தமிழகத்திலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது. இந்நிலையில் வடமேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன்காரணமாக தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. மேலும் நேற் றைய தினம் தெற்கு குஜராத் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவியது. இந்த மேலடுக்கு சுழற்சி காரணமாக, இன்று காலை அதே பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி




உருவாகியுள்ளது. இது வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுவடையக்கூடும். இதனுடன் தென்மேற்கு வங்கதேசம் மற்றும் கங்கை நதி ஒட்டிய மேற்கு வங்க பகுதிகளிலும் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்று காலை அதே பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுவடையும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்று முதல் 5 நாட்களுக்கு தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் இன்று கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப் புள்ளதாகவும், நாளை நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்பு ள்ளதாகவும், சென்னை நகரை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட் டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான, மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 3536 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2627 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# அவலாஞ்சியில் 300 மிமீ கொட்டியது தென்மேற்கு பருவமழை குறைய தொடங்கும்

சென்னை, ஜூன்.18-

நீலகிரியில் அதிகனமழை பெய்யும் என்று கணிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் தொடங்கி நேற்று வரையில் அவலாஞ் சியில் 300மிமீக்கு மேல் மழை பெய்துள்ளது. நேற்று காலையில் 10 மணிக்கு மேல் தமிழகத்தில் சாரல் மழை பெய்யத் தொடங்கியது. இன்று மழை குறைய வாய்ப்பு இருந்தாலும், மகாராஷ்ட்ரா அருகே நிலை கொண்டு இருந்த காற்று சுழற்சி குஜராத் பகுதிக்கு சென்றுவிட்டது. மும்பைக்கும் அகமதா பாத்துக்கும் இடையில் சூரத் பகுதியில் அதீத மழை பெய்கிறது. இந்த காற்று சுழற்சி பாகிஸ்தான் பகுதி நோக்கி நகர இருக்கிறது. இதற்கிடையே, வங்கக் கடலில் ஒடிசா பகுதியில் நீடித்து வந்த காற்று சுழற்சி பீகார் பகுதிக்கு நகரத் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் நேற்று தென் மேற்கு பருவமழை பெய்த நிலையில், படிப்படியாக மழை பெய்வது குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலும் மழை பெய்வது குறையும்.

இந்நிலையில், நேற்று மாலைக்கு பிறகு தமிழ கத்தில் மழை பெய்வது தீவிரம் அடைந்தது. இன்று அது படிப்படியாக குறையத் தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம். டெல்டாவில் தூறல் மழை நீடித்துக் கொண்டு இருக்கும். அடுத்தடுத்து வங்கக் கடல் பகுதியில் காற்று சுழற்சிகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மெல்ல நகரும் காற்றின் காரணமாக ஈரப்பதம் உள்ள காற்றை தமிழக கடலோரப் பகுதிக்கு அது கொண்டு வரும். கடலோரம் பயணித்துக் கொண்டு இருக்கும் காற்று தமிழகத்தை குளிர்விக்கும் நிலை உள்ளது.

இந்த சூழ்நிலையில், இன்று தென்மேற்கு பருவமழையின் தீவிரம் குறைந்து வங்கக் கடலோரத்தில் லேசான மழை மட்டுமே பெய்யும். மேற்கில் இருந்து வரும் காற்று கிழக்கு நோக்கி சென்று விடும். இருப்பினும் 18ம் தேதி வட மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். மாலை இரவு நேரங்களில் இடி மின்னலுடன் மழை பெய்யும். திருவள்ளூர் தொடங்கி சேலம் வரை மழை பெய்யும். தென் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். மேலும், 24ம் தேதியில் இருந்து மீண்டும் மழை பெய்யத் தொடங்கும். மாலை இரவில் வெப்ப சலன மழை பெய்யும். இது பரப்பில் மேலும் அதிகரித்து இடி மின்னல் மழை பெய்யும்.

# உயிர் காக்கும் வால்வு பழுதுநீக்கல் சிகிச்சையில் முதன்மை வகிக்கும் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

மதுரை, ஜூன்.18-

இதய சிகிச்சைகளில் ஒன்றான இதயத்தின் வால்வுகள் மற்றும் சுவர்கள் போன்ற கட்டமைப்பை பாதிக்கும் நிலைமைகளுக்கு, குறைந்தபட்ச ஊடுருவல் சிகிச்சைகளின் வழியாக சிகிச்சையளிப்பதில் மேம்பட்ட நிபுணத்துவத்தை கொண்டிருக்கிறது அதிக ஆபத்துள்ள இதய நோயாளிகளின் உயிர்க ளைக் காப்பாற்றவும், இதயம் தொடர்பான சிக்கல்களால் பாதிக்கப்பட்ட உறுப்புகளின் இயக்கத்தை மீட்டெ டுக்கவும் இம்ம ருத்து வமனையின் உயர் உட்கட் டமைப்பு வசதிகளும், மருத்துவர்கள் குழுவின் அனுப வமிக்க செயல் திறனும், நிபுணத்துவமும் உதவியுள்ளது




சமீபத்தில், 70 வயதான ஒரு முதியவருக்கு கிழிந்த பெருந்தமனி விரிவாக்கப் பிரச்சனைக்கு சிகிச்சையளிக்க, TEVAR என அழைக்கப்படும் சிகிச்சையை இம்மருத்து வமனை வெற்றிகரமாக செய்திருக்கிறது; இதய கீழறைகளில் பிரச்சனை ஏற்பட்டிருந்த 68 வயதான ஒரு ஆண் நோயாளிக்கு கடுமையாக குறுகி இருந்த வால்வை மாற்றுவதற்கு கதீட்டர் அடிப்படையிலான சிகிச்சையளித்தது. TAVR அழைக்கப்படும். அறுவை சிகிச்சை அல்லாத ஒரு மருத்துவச் செயல் முறையில் 41 வயதான ஒரு ஆண் நோயாளிக்கு திறந்தநிலை இதய அறுவைசிகிச்சைக்கான அவசியத்தை தவிர்த்து TEER என்பதனையும் இம்மருத்துவமனை வெற்றிகரமாக செய்து குணப்படுத்தியிருக்கிறது. இதுகுறித்து டாக்டர் சிவகுமார் கூறியதாவது 70 வயதான முதியவர், அவரது மார்பில் உள்ள முக்கிய தமனியில் உயிருக்கு ஆபத்தான வீக்கத்தால் (மார்புப் பெருந்தமனி விரிவாக்கம்) அவதிப்பட்டு வந்தார். அவருக்கு இதய அதிர்ச்சி பாதிப்பு ஏற்பட்டிருந்தது; போதுமான அளவு இரத்தத்தை இதயத்தால் பம்ப் செய்து அனுப்ப முடியாத ஒரு ஆபத்தான நிலை இது அவருக்கு செய்யப்பட்ட ஒரு CT அயோர்டோகிராம் பரிசோதனையில், இரத்தநாள் விரிவாக்கம் உணவுக்குழாய்க்குள் கிழிந்து சிதைவடைந்து உடல் நிலையை மிகவும் மிகவும் மோசமாக்கியிருப்பதைக் காட்டியது எனவே, காலில் ஒரு சிறிய துளையின் வழியாக சேதமடைந்த தமனிக்குள் ஒரு ஸ்டென்ட் ஐ பொருத்துகிற TEVAR அறுவை சிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொண்டனர். இதை செய்து முடித்தவுடன் உடனடியாக கிழிசல் அடைக்கப்பட்டு இரத்தக் கசிவு நிறுத்தப்பட்டது. இதனால் விரைவாக அந்நோயாளி குணமடை வதற்கு இது வழிவகுத்தது நோயாளியின் இரத்த அழுத்தமும் சிறுநீரக செயல்பாடும் கணிசமாக மேம்பட்டது. தொடர்ந்து மருந்துகளை உட்கொள்ள வேண்டுமென்ற அறிவுறுத்த ல்களுடன் மருத்துவமனை யிலிருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இம்முதியவர் தற்போது தொடர் கண்காணிப்பின் கீழ் நலமாக இருக்கிறார் என்றார் டாக்டர். R . சிவகுமார்; இதய இண்டர்வென்ஷனல் சிகிச்சை துறை இயக்குநர் டாக்டர். S. செல்வமணி; அகாடமி பிரிவின் இயக்குநர் டாக்டர். N. கணேசன், மரபு வழி கோளாறுகளுக்கான சிகிச்சை நிபுணர் டாக்டர். M. சம்பத் குமார், எலக்ட்ரோபி சியாலஜி பிரிவுத் தலைவர் டாக்டர். ஜெயபாண்டியன்; இதய இண்டர்வென்ஷனல் சிகிச்சை பிரிவின் இணை நிபுணர் டாக்டர். தாமஸ் சேவியர்; மற்றும் இதய மயக்கவியல் துறையின் முதன்மை நிபுணர் டாக்டர். எஸ். குமார், இதய மற்றும் இரத்தநாள அறுவை சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர்டாக்டர். R.M கிருஷ்ணன், இதய மற்றும் இரத்தநாள அறுவை சிகிச்சை துறையின் முதுநிலைநிபுணர் டாக்டர். ராஜன். இரத்தநாள அறுவை சிகிச்சைத் துறையின், நிபுணர் டாக்டர். பிரபு குமரப்பன் சிதம்பரம் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர். இம்மருத்துவமனையின் திரு. திலீப் பௌர்னார்ட் இந்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்வில் உடனிருந்தார்.



# வேலூர் மாவட்டத்தில் மினி பேருந்துகள் துவக்க விழா

## அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று கொடியசைத்து துவக்கி வைப்பு

வேலூர், ஜூன்.18-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, புதிய பேருந்து நிலைய வளாகத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மினி பேருந்து புதிய விரிவாக்க திட்டத்தினை தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வேலூர் மாவட்டத்தில் 4 புதிய மினி பேருந்து வழித்தடங்கள் மற்றும் 14 மாற்றியமைக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கடந்த 16 ஆம் தேதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தனர். இதில் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் குமார், மாநகராட்சி ஆணையாளர் லட்சுமணன், மண்டலக் குழுத் தலைவர்கள் வெங்கடேசன், நரேந்திரன், மாமன்ற உறுப்பினர் காஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தர்ராஜன், போக்குவரத்து மோட்டார் ஆய்வாளர் ராஜேஷ் கண்ணா, ராஜ்குமார் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் மினி பேருந்து உரிமையாளர்கள் சங்க தலைவர் நிர்வாகிகள், வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துனர்கள் என பலர் கலந்து கொண்டனர். இறுதியில் குடியாத்தம் வட்டார போக்குவரத்து மோட்டார் ஆய்வாளர் ராஜேஷ் கண்ணா நன்றியுரையாற்றி விழா நிறைவு பெற்றது.



# மாநிலங்களவை உறுப்பினராகியுள்ள நடிகர் கமலுக்கு, வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.வி மற்றும் துணைத் தலைவர் செல்வம் வாழ்த்து தெரிவிப்பு

சென்னை, ஜூன்.18-

சென்னை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நீதி மையம் கட்சியின் தலைவர் கமல்ஹாசனை வேலூர் வி.ஐ.டி. வேந்தர் கோ. விஸ்வநாதன் மற்றும் துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலைஞரின் 102 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மேடவாக்கம் தொடக்கப் பள்ளிக்கு

# ரூ. 9 லட்சம் மதிப்பீட்டில் மேடவாக்கம் ஒன்றிய இளைஞர் அணி சார்பாக பள்ளி மாணவர்களுக்கு 100 பெஞ்ச் மற்றும் டேபிள் வழங்கும் விழா

மேடவாக்கம், ஜூன்.18-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மேடவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர், ஆர் .எஸ்.லோகேஸ்வரா நிகழ்ச்சியை ஏற்பாட்டில் ரூபாய் 9 லட்சம் மதிப்பீட்டில் மேடவாக்கம் திமுக ஒன்றிய இளைஞர் அணி சார்பாக பள்ளி மாணவர்களுக்கு 100 பெஞ்ச் மற்றும் டேபிள் வழங்கும் விழா நடைபெற்றது.



இந்நிகழ்வுக்கு மாண்புமிகு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் , மா. சுப்பிரம ணியன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், மு.ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றிய குழு உறுப்பினர், தலைமை பொதுக்குழு உறுப்பினருமான, மேடவாக்கம், ப.ரவி, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் மேடவாக்கம் அனைத்து கழக நிர்வாகிகள் மற்றும் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் முடிவில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மதிய அருஞ்சுவை உணவு வெஜிடபிள் பிரியாணி வழங்கப்பட்டது.




■ மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் வீட்டு கதவு எண் மாற்றம் செய்ய வேண்டி விண்ணப்பித்த மனுதாரருக்கு உடனடியாக கதவு எண் மாற்றம் செய்யப்பட்டு அதற்கான அனுமதி ஆணையினை மனுதாரருக்கு மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் சித்ரா விஜயன், ஆகியோர் வழங்கினார்கள் அருகில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் வாசுகி, துணை ஆணையாளர் .ஜெய்னுலாபுதீன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# வேலூர் ஆகாஷ் எஜிகேஷனல் சர்வீஸில் மூன்று மாணவர்கள் நீட் யுஜில் சாதனை




வேலூர், ஜூன்.18-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை ஆகாஷ் எஜுகேஷனல் அலுவலகம், வேலூரில் மாணவர்கள் தேர்வுக்கு தயாராகும் பயிற்சியில் இந்தியாவின் முன்னணி நிறுவனம் ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் (AESL) பெருமிதத்துடன் அறிவிக்கிறது NEET UG 2025 தேர்வில் வேலூர் கிளையின் மூன்று மாணவர்கள் சிறந்த மதிப்பெண்கள் பெற்று தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த சாதனை மாணவர்களின் அர்ப்பணிப்பு, கல்வி ஒழுக்கம் மற்றும் AESL வழங்கிய தரமான பயிற்சி மற்றும் வழிகாட்டலின் வெளிப்பாடாகும். தேர்வின் முடிவுகள் நேற்று தேசிய தேர்வுகள் அமைப்பு (NTA) வெளியிட்டது.

சிறந்த மாணவர்கள்: 1. ஆயுஷ் அபய் T- AIR 310, 2.மோனிகா ஏ.என் AIR 709 3.இஷான் அபிராஹம் H- AIR 1131 ஆகிய மாணவர்கள் AESLஇன் வகுப்பறை பயிற்சி திட்டத்தில் பயின்றனர். இந்த திட்டம், உலகின் மிகவும் சவாலான மருத்துவ நுழைவு தேர்வுகளில் ஒன்றான NEET தேர்வை எதிர்கொள்ள மாணவர்களுக்கு துணை யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

வெற்றிக்கு காரணமாக மாணவர்கள், AESL அளித்த திடமான கல்வி அடித்தளம், கருத்து தெளிவும், ஒழுங்கான படிப்பு பழக்கமும் குறிப்பிடுகின்றனர்.

மாணவர்கள் கூறியதாவது: "இந்த பயணத்தில் எங்களுக்கு வழிகாட்டிய ஆகாஷ் நிறுவனத்திற்கு நாங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். சீரான பாடத்திட்டம், நிபுணத்துவ கற்பித்தல் மற்றும் தனிப்பட்ட வழிகாட்டல் ஆகியவை எங்களை சிக்கலான தலைப்புகளில் வல்லவர்களாக மாற்றின. AESL இல்லாமல் இந்த வெற்றியை அடைய முடியாது." AESL நிறுவனத்தின் கல்வி மற்றும் வணிகத் தலைவர் தீரஜ்குமார்மிஸ்ரா, மாணவர்களை பாராட்டி கூறியதாவது: "NEET UG 2025 தேர்வில் எங்கள் மாணவர்கள் பெற்றுள்ள சிறப்பான வெற்றிக்கு நாங்கள் பெருமைப்படுகிறோம். நாடு முழுவதும் பங்கேற்புடன் நடைபெறும் இந்த தேர்வில் இவ்வளவு உயர்ந்த மதிப்பெண்கள் பெறுவது மிகவும் சிறப்பான சாதனை. இந்த வெற்றிகள் மாண வர்களின் உழைப் பையும், பெற்றோர்களின் ஆதரவும், எங்கள் கலவி குழுவின அர்ப்பணித்த உழைப்பையும் பிரதிபலிக்கின்றன. அவர்களின் மருத்துவ பயணத்திற்கு நாங்கள் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்."

NEET UG என்பது MBBS, BDS, மற்றும் AYUSH (BAMS, BUMS, BHMS உள்ளிட்டவை) போன்ற பட்டப்படிப்புக்களுக்கான தகுதி தேர்வாக தேசிய தேர்வுகள் அமைப்பு (NTA) ஆண்டுதோறும் நடத்தும் நுழைவுத் தேர்வாகும்.

இந்தியா மற்றும் வெளிநாட்டிலுள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் மருத்துவ கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கு தேவையான தேர்வாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



# திமுக ஒன்றிய இளைஞரணி சார்பாக தொடர்ந்து 64 நாட்களாக பொது மக்களுக்கு நீர், மோர் பந்தல்

மேடவாக்கம், ஜூன்.18-

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்ரமணியன் மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மேடவாக்கம் மு. ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றிய குழு உறுப்பினர், மேடவாக்கம், ப. ரவி வழியில் புனித தோமையார் மலை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர், ஆர் .எஸ்.லோகேஸ்வரா நிகழ்ச்சி ஏற்பாட்டில் தொடர்ந்து 64 வது நாளாக பொது மக்களுக்கு நீர், மோர், வழங்கினர். உடன் மேடவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், சிவபூஷணம் ரவி, ஒன்றிய கழக துணைச் செயலாளர், ஹெச். டி. போஸ், ராமையா நகர் கிளைக் கழகச் செயலாளர் எஸ். சுரேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் எஸ். கிஷோர், ஏ.வி.எம்.முருகன், கே.ரவி கேசவன், என்.மூர்த்தி, ஆர். சுந்தர், பி. சுதாகர், எஸ். ரமேஷ்,மேடவாக்கம் இளைஞர் அணி அமைப்பாளர், கே. ராஜேஷ், மேடவாக்கம் இளைஞர் அணி துணை அமைப்பாளர், எம். பி. என். பாஸ்கர், எம் .பி .என். ரமேஷ், தாவூத் நகர் இளைஞர் அணி அமைப்பாளர், எம் ,ஆர், ரமேஷ், என் .ஆர்.கே.கேசவன் மேடவாக்கம் கிளை கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# காரைக்குடியில் மத்திய அரசின் மலிவு விலை மக்கள் மருந்தகங்கள் திறப்பு விழா

சிவகங்கை, ஜூன்.18-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மத்திய அரசின் மலிவு விலை மக்கள் மருந்தகங்கள், காரைக்குடியில் ஆறுமுக நகர் மற்றும் ஜவகர் தெருவில் ஆகிய இரு இடங்களில் திறக்கப்பட்டன. சிவகங்கை மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் மருத்துவர் அருள்தாஸ் திறந்து வைத்தார். பாஜக பட்டியலின அணி தேசிய செயற்குழு உறுப்பினர் விஸ்வநாத கோபாலன் முன்னிலையில் நடைபெற்ற விழாவில், பா.ஜ.க சிவகங்கை மாவட்ட தலைவர் பாண்டித்துரை, பாஜக மாநில பட்டியல் இன அணி துணைத்தலைவர் ஆதினம், AARMS தலைவர் கண்ணன், விசிக அமீரக மேனாள் பொறுப்பாளர் முத்தமிழ் வளவன், விசிக இளைஞர் எழுச்சி பாசறை மாநிலத் துணைச் செயலாளர் பாண்டி செல்வம், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். உரிமையாளர்கள் பன்னீர்செல்வம்,சௌந்தரராஜன், வரதராஜன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.



# வேலூரில், மாவட்ட ஊராட்சிக் குழு மற்றும் மாவட்ட திட்டக்குழு கூட்டம்

## மாவட்ட ஊராட்சி திட்டக்குழு தலைவர் பாபு பங்கேற்பு

வேலூர், ஜூன்.18-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அண்ணா சாலை, வேலூர் மாவட்ட ஊராட்சி குழு மற்றும் மாவட்ட திட்ட குழு அலுவலகத்தில் மாவட்ட ஊராட்சி திட்ட குழு தலைவர் முபாபு தலைமையிலும், மாவட்ட ஊராட்சி திட்டக்குழு செயலாளர் யுவராஜ் முன்னிலையிலும் இக்கூட்டம் நடைபெற்றது. இதில் மக்கள் பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# திமுக அலுவலகத்தில் செயற்குழு கூட்டம்

## திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் மற்றும் எம்.பி. கதிர் ஆனந்த் பங்கேற்பு

வேலூர், ஜூன்.18-

வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கலந்துகொண்டு பேசினார். இதில் அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, வேலூர் எம்.பி.கதிர் ஆனந்த். மாநகர செயலாளர் கார்த்திகேயன், பொருளாளர் நரசிம்மன், ஒன்றிய, பகுதி செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை அனுப்பானடி அருள்மிகு ஸ்ரீ வெங்கல மூர்த்தி அய்யனார் திருக்கோவில் மற்றும் சோனணயா சாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் தொடர்பாக உபயதார்கள் மூலம் திருப்பணிகள் செய்யப்பட வேண்டிய அவசிய நிலையில், திருப்பணிகள் வேலைகள் செய்வது தொடர்பாக உபயதாரர்கள் மற்றும் அனுப்பானடி கிராம 12 கரைகாரர்கள், ஊர் பொதுமக்கள், ஊர் பெரியோர்கள் ஆகியோர் தலைமையிலும், அருள்மிகு மதனகோபால சுவாமி கோவில் செயல்அலுவலர் கார்த்திகைசெல்வி முன்னிலையில் ஆலோசனை கூட்டம் அனுப்பானடி ஸ்ரீ வெங்கல மூர்த்தி அய்யனார் கோவில் வளாகத்தில் நடைபெற்றது,

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161